விபச்சாரியா? பூசாரியா?

சாத்திரி
(ஒரு பேப்பருக்காக)

தலைப்பைப் பாத்திட்டு இந்து மத நம்பிக்கையாளர்கள் கொதித்து எழலாம். மத நம்பிக்கையில்லாதவர்கள் இரண்டுமே ஒண்டுதானே என நினைக்கலாம் வேற்று மதக்காரர்கள் இந்து மதத்திலை இதுதானே நடக்கிறது என்று அலுத்துக் கொள்ளலாம். (இந்து மதம் வேறு சைவ மதம் வேறு) ஆனால் என்னுடைய சைவ மதத்திற்கே இழுக்கு ஒருசில பூசாரிகளாலும் சாமியார்களாலும் தான். நானும் ஒரு சைவன் என்கிற முறையில் வெட்கித் தலை குனிந்தபடி இதனை எழுதுகின்றேன்.

யெர்மனியில் ஹம் காமாட்சியம்மன் கோயில் ஜரோப்பாவிலேயே மிகவும் பிரசித்தி பெற்ற பிரமாண்டமான கோயில். இந்தக் கோயில் தொடங்கிய காலத்திலிருந்தே பல சர்ச்சைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அண்மையில் புதியதொரு சர்ச்சை, ஆனால் கொஞ்சம் ஆழமாக அவதானிக்க வேண்டிய சம்பவம் நிகழ்ந்திருக்கின்றது.

அது ஜெர்மனிக்கான சிறீலங்காவின் தூதர் மதுவிஜிதரா என்பவர் கோயிலுக்கு கும்பிடப் போனதுதான் பிரச்சினையே. கோயிலுக்கு எல்லாரும் கும்பிடத்தான் போவாங்கள். பிறகென்ன அங்கு கும்மியடிக்கவா போவாங்கள் என்று எல்லாரும் நினைக்கலாம். ஆனால் சிறீலங்கா தூதுவர் கோயிலுக்குப் போய் சாதாரணமாய் ஒரு விசேட அருச்சனை செய்து சாமி கும்பிட்டு விட்டு போயிருந்தால் பிரச்சனையில்லை.

கும்பிடப் போனவரிற்கு கோயில் பூசகர் பொன்னாடை போர்த்தி அழகு பார்த்து முதல் மரியாதை செய்து கோயில் அலுவலகத்தில் அழைத்து சென்று பேசியிருக்கிறார்கள். இந்தச் செய்தியும் படங்களும் இலங்கைத் தூதரக இணையத்திலும். ஈழப்போராட்டத்திற்கு எதிராக இயங்கி வருகின்ற ஏசியன் ரிறிபியூன் இணையத்திலும் வெளியாகியிருந்தது. காரணம் இது கூட இலங்கையரசு வெளிநாடுகளில் மேற்கொள்கின்ற ஒருவகைப் பிரச்சாரம்தான்.

இந்தச் சம்பவம் நடந்த பின்னர் கோயில் பூசகரிடம் விபரம் ஏதாவது பெறலாமென நினைத்து நான் தொடர்பு கொள்ள முயற்சித்து அலுவலக தொலைபேசிக்கு தொடர்பு கொண்டேன். முடியவில்லை. ஆனால் பொன்னாடை போர்த்தி மரியாதை செய்வது சாதாரண நிகழ்வு தான் எனவே இதனைப் பெரிது படுத்த வேண்டாம் என கோயில் அலுவலகத்தில் இருந்த கோயில் நிருவாகி ஒருவர் தெரிவித்தார்.

இதே போன்றதொரு சம்பவம் இங்கிலாந்திலும் சில காலங்களிற்கு முன்னர் நடந்தது. ஆனால் என்னிடம் சில கேள்விகள்.

1. இலங்கை அரசோ ஈழத்தில் கோவில்களையும் தேவாலயங்களையும் குண்டு வீசி அழித்துக் கொண்டிருக்க இலங்கைத் தூதரக அதிகாரிகளிற்கு மட்டும் வெளி நாடுகளில் உள்ள கோயில்களில் ஏன் திடீர் பக்தி ..?

2. கோயில் நிருவாகம் சொன்னது போல பொன்னாடை போர்த்துவது சாதாரண நிகழ்வென்றால் அங்கு போகின்ற அனைத்து பக்தர்களிற்கும் ஏன் பொன்னாடை போர்ப்பதில்லை. சரி சிறீலங்கா தூதுவரிற்கு மரியாதை செய்தார்கள் என்று வைத்துக் கொண்டாலும் அலுவலகத்தில் அழைத்துப் போய் என்ன பேசியிருப்பார்கள்..?

3. இந்தக் கோயில் நிருவாகத்தினால் தற்சமயம் ஈழத்தில் அல்லலுறும் எம் உறவுகளிற்கு எவ்வித உதவியும் செய்யப்படவில்லை ஆனால் கோயில் அருகே ஒரு மடம் கட்டுவதற்காக காணி வாங்குவதற்கு பக்தர்களிடம் 150 யூரோக்கள் வசூலித்து வருகிறார்கள். தற்சமயம் வீடுவாசல் இழந்து காடுகளில் எம் உறவுகள் வாழ்ந்து வரும் வேளை ஹம் காமாட்சி அம்மனிற்கு காணி தேவையா?

இவை எனது கேள்விகள். பக்த கோடிகளே, பதில் உங்களிடம் தான் உள்ளது

வாசகர் கடிதம்

ஈழத் தமிழர்களே! எங்கே போனீர்கள்?

கனடாவில் வின்னிபெக், மனிரோபா, என்ற இடத்தில் இருக்கும் தமிழர்களின் எண்ணிக்கை 300 இற்கும் குறைவு. அதில் 200 இற்கும் குறைவான வர்களே இந்துக்கள். இங்கு கடந்த மாதம் இடம் பெயர்ந்து அவலப்படும் தமிழ் மக்களுக்கு எப்படி உதவி செய்வது என்பது தொடர்பாக ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. வந்தவர்களின் எண்ணிக்கை 20 இற்கும் குறைவு. உடனடியாக யாரும் விரும்பினால் நன்கொடையளியுங்கள் அப்பணத்தை இடம்பெயர்ந்த மக்களுக்கு அல்லது வட கிழக்கு பகுதிக்கு என தனிப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்துள்ள தொண்டு நிறுவனங்களூடாக கொடுப்போம் என கேட்ட போது அதற்கு பணம் கொடுத்தவர்கள் சிலர். ஒரு சிலரை தவிர ஏனையோர் கொடுத்த தொகை 50 டொலரையும் தாண்டாது.

கூட்ட முடிவில் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒரு நிதி சேகரிப்பு இரவுணவை ஒழுங்கு செய்வது என்றும், அதற்கு இங்குள்ள ஏனைய இன மக்களையும் கூப்பிடுவது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் அந்த நிதி சேகரிப்புக்கான காலம் வரும் வருடம் ஜனவரி மாதம் என தீர்மானிக்கப்பட்டது.

இங்கு தமிழர்களுடைய கோயில்கள் எதுவும் இல்லை. குறிப்பாக வட இந்தியர்களால் நடாத்தப்படும் கோயில்கள் சில உண்டு. அங்கு அவர்களின் அனுமதியுடன் வாரம் ஒரு நாள் தமிழ் பூசை நடப்பதுண்டு. அது தவிர தமிழர்களால் கொண்டாடப்படும் விழாக்களுக்கும் விசேட பூசை நடப்பது வழக்கம்.

அண்மையில் கந்தசட்டி விரத இறுதியில் நடந்த திருக்கல்யாண நிகழ்வின் முடிவில் 16000 கனேடிய டொலர்களுக்கு கூடிய தொகை மனிரோபா இந்து கழகத்திற்கு இங்குள்ள தமிழர்களால் கொடுக்கப்பட்டது. மனிடோபா இந்து கழகம் என்பது அதிகளவில் வட இந்திய மக்களால் நிர்வாகிக்கப்படும் நிறுவனம் என்பதுடன் அவர்களால் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகளில் இந்தி மொழிக்கு மட்டுமே முன்னுரிமை கொடுக்கப்படும்.

கோயிலில் வழிபடுவதற்காக ஒவ்வொரு வருடமும் 16000 டொலர் கொடுக்கும் தமிழர்களால் ஏன் இதில் ஒரு பங்கை தன்னும் இடம்பெயர்ந்த மக்களுக்கு கொடுக்க மனம் வரவில்லை. கோயிலுக்கு தமது பிள்ளைகளை 4 - 5 மணி நேரம் செலவழிக்க இந்தியர்களின் குர்தா அணிந்து இழுத்துவரும் தமிழர்களால் ஏன் ஈழத்தில் இடம்பெயரும் மக்கள் சம்பந்தமான ஒரு அரை மணி நேர கூட்டத்துக்கு அழைத்து வர முடியவில்லை.

கோயிலில் முன்னுக்கு நிற்கும் சில படித்த பேரசிரியர்களும், வைத்திய கலாநிதிகளும் ஈழ மக்களுக்கு உதவி செய்யும் நிகழ்வு என்றதும் எங்கே போய்விட்டார்கள்.

இவர்கள் எல்லாம் ஈழத் தமிழர்கள் என்று சொல்லவே ஏன் மனிதர்கள் என்று சொல்லவே வெக்கமா இருக்கு.

- *கஜன்*

ஒருமைத்துவ பல்கலைக்கழகம் (Oneness University)

அழைப்பிதழ்

அருள் பெருகிட ஸ்ரீ பகவான் கூறுகிறார்.

நீங்கள் என் அருளை நாடும் போது எப்போதும் முதல் அடியை,அது சிறியதோ, பெரியதோ, நான் தான் எடுத்து முன்வைக்கிறேன்.
அதன்பிறகு (அருளை) உணர்ந்து உங்கள் இருதயம் நன்றியால் நிரம்பினால்,இரண்டாம் முறையாக உங்களுக்கு அருள் கொடுக்கப்படுகிறது.
ஒவ்வோரு முறையும் நீங்கள் அருளை உணரும் போது என்னுடன் ஒரு பந்தத்தையும் உணர்வீர்கள்.
மேலும் என்னை புதுமையாக காண்பீர்கள். ஆபத்தில் உதவுபவனே நண்பன்.
எவருமே நினைத்திராத வகையில் என்னால் உதவ முடியும்.
இன்று நட்பு என்பது ஒருவரை மற்றவர் தன் சுயநலத்துக்காக உபயோகப் படுத்துவது என்பது உங்களுக்கே தெரிந்த விடயம்.
ஆனால் உங்களுக்கும் எனக்கும் இடையில் நான் கேட்பதெல்லாம் பின்வரும் உறவுமுறையே (பந்தம்).
ஆனால் உங்களுக்கு நான் எவ்வாறு தேவையோ அவ்வாறே நானும் உங்களுடன் இருக்க ஏங்குகிறேன்.

இப்பெருமை கொண்ட அருள் மிக்க அம்மா பகவானைப் பற்றி மேலும் அறிந்து அவர்களின் வரப்பிரசாதமான தீட்சை வரம் பெற வாரீர்

திகதி: 30 November 2008 நேரம் 2.30p.m to 7.00p.m

T.P:- 0208 6469 415, 07896664467, 07931347268, 07960386720
07868312922, 07525005570, 07725797720

இடம்: Lola Jones Hall
Tooting Leisure Center
Greaves Place (Off Garatte Lane)
Tooting London SW17 0NE

அனைவரும் வாரீர்